# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.9 நாள் 16.04.2026

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 230/2025 (Old CC.No.106/2016) | | |
| பெயர் | கலாவதி | க/பெ. | [illegible] |
| வயது | 64 | தொழில் | ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | கடலூர் | தாலுக்கா | கடலூர் |

**(எதிரிகள் ஆஜர்).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வணிக குற்றவியல் புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் நாகப்பட்டினம் வணிக குற்றவியல் புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். எனக்கு முன்பாக இருந்த ஆய்வாளர் பிரித்திவிராஜ் கையொப்பம் எனக்கு பரிட்சயம். அவர் தற்போது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் 18.12.2014 அன்று நாகப்பட்டினம் வணிக குற்றவியல் புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தஞ்சை துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலக C.No.13/DSP/CCIW/Tan/2014, dt: 15.12.2014 மற்றும் சென்னை வணிக குற்றப்புலனாய்வு துறை, காவல் கண்காணிப்பாளர் அவர்களின் C.No. 221/SP/CCIW/CSR/2014, Dt:10.12.2014 நளினாவின் படி கிடைத்த மயிலாடுதுறை கூட்டுறவு சரக துணை பதிவாளர் கடிதம் ந.க. 2560/2014வத, நாள். 01.12.2014-ன் படி புகாரை 18.12.2014 அன்று பெற்று குற்ற எண்.3/2014 பிரிவு 403, 406, 408, 420, 468, 477(A), 120(B) r/w 34 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.36** ஆகும். பின்பு, இவ்வழக்கின் சாட்சிகளான புகார்தாரர் நளினா அவர்களை 18.12.2014 அன்றும், சாட்சி உமாவை 14.02.2015 அன்றும், சாட்சி கண்ணனை 14.01.2015 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு, 26.12.2014 அன்று நாகப்பட்டினம் கூட்டுறவு துணை பதிவாளர் அலுவலகத்திலிருந்து விசாரணைக்காக 1 முதல் 84 வரையிலான இந்த

CJM, MAYILADUTHURAI.

D. Kalavathy
16/4/26

வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொண்டார். பின்பு, நான் நாகப்பட்டினம் வணிக குற்றவியல் புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக 21.07.2015 அன்று பணியில் சேர்ந்து இந்த வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் சாட்சிகளான மரியந்துவான், ராஜேஷ், ராதிகா, சண்முகசுந்தரம் ஆகியோரை 07.09.2015 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு, ஒப்புக்கொள்ளப்பட்ட மகாலெட்சுமியின் கையெழுத்து 1 முதல் 3, ஒப்புக்கொள்ளப்பட்ட ஆரோக்கியராஜின் கையெழுத்துக்கள் மற்றும் எழுத்துக்கள் 4, 8 முதல் 10, நடராஜனால் எழுதப்பட்ட ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து 5 முதல் 7 ஆகியவை **அ.சா.ஆ.37** முதல் **அ.சா.ஆ.46** ஆகும். மேலும், மகாலெட்சுமியின் மாதிரி கையொப்பம் **அ.சா.ஆ.47** ஆகும். மேலும், நடராஜனால் எழுதப்பட்ட மாதிரி எழுத்துக்கள் **அ.சா.ஆ.48** ஆகும்.

பின்பு, கேள்விக்குறியான 1 முதல் 23, 47 ஆரோக்கியராஜின் கையெழுத்துக்கள் மற்றும் கேள்விக்குறியான 24 முதல் 45 மகாலெட்சுமியின் கையெழுத்துக்கள், கேள்விக்குறியான 46 எதிரி நடராஜனால் எழுதப்பட்டதும், மேலும் மகாலெட்சுமியின் மாதிரி கையொப்பம் 1 முதல் 15, நடராஜனால் எழுதப்பட்ட மாதிரி எழுத்துக்கள் 16, ஒப்புக்கொள்ளப்பட்ட மகாலெட்சுமியின் கையெழுத்து 1முதல்3, ஒப்புக்கொள்ளப்பட்ட ஆரோக்கியராஜின் கையெழுத்துக்கள் மற்றும் எழுத்துக்கள் 4, 8 முதல் 10, நடராஜனால் எழுதப்பட்ட ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து 5 முதல் 7 ஆகியவை தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு 11.09.2015 அன்று தடய அறிவியல் துறையால் ஆய்வு செய்து கீழ்க்கண்ட அறிக்கை கொடுக்கப்பட்டது.

1. ஒப்புக்கொள்ளப்பட்ட 4 முதல் 7, கேள்விக்குறியான 1 முதல் 23, 47 ஆகியவை ஒரே நபரால் எழுதப்பட்டத்தும் என்றும்,
2. ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து 1 முதல் 3, மாதிரி கையொப்பம் மற்றும் எழுத்துக்கள் 1 முதல் 15, கேள்விக்குறியான 24 முதல் 45 ஒரே நபரால் எழுதப்பட்டது என்றும்,
3. ஒப்புக்கொள்ளப்பட் கையெழுத்து 8 முதல் 10, மாதிரி எழுத்துக்கள் 16, கேள்விக்குறியான எண்.46 ஒரே நபரால் எழுதப்பட்டது என்றும்,

தடய அறிவியல் நிபுணர் தாமரைச்செல்வன் மற்றும் துணை இயக்குநர் அழகேசன் என்பவரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த

CJM, MAYILADUTHURAI.

P. Kalavathi
16/4/26

தடய அறிவியல் அறிக்கை **அ.சா.ஆ. 49** ஆகும். அந்த தடய அறிவியல் நிபுணர் தாமரைச்செல்வனை 03.11.2015 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, துறை ரீதியான விசாரணை அதிகாரியான மதிவாணனை 18.11.2015 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையின் படி 1 ம் எதிரி மகாலெட்சுமி பில் எண். 2947 படி திருவெண்காடு ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு ரூ.1,98,000/- மருந்து சப்ளை செய்ததாக போலியாக பில் தயார் செய்யப்பட்டதாக தெரியவந்தது. அந்த தயார் செய்யப்பட்ட கடன் விற்பனை பில் எண். 2947 **அ.சா.ஆ.50** ஆகும். பின்பு என் விசாரணையை முடித்து எதிரி மகாலெட்சுமி மற்றும் ஆரோக்கியராஜ் மீது பிரிவு 408, 465, 468, 471, 477(A) r/w 34 இதச பிரிவின் கீழ் மாண்புமிகு நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் மேல்விசாரணைக்கு 25.07.2015 அன்று ஆரம்பித்தேன். மரியந்துவான் என்பவரை நான் தான் 07.09.2015 அன்று விசாரணை செய்தேன். அவர் என்னுடைய விசாரணையில் மருந்தக பிரிவு போன்ற எல்லா பிரிவுகளுக்கும் மொத்த விலைக்கு கொள்முதல் செய்யும் அனைத்து பொருட்களையும் விற்பனையாளரிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேலும் என்னுடைய விசாரணையின் போது ஒப்படைக்கப்பட்ட பொருட்களுக்கான இருப்பிற்கு மருந்தாளுநர் அல்லது விற்பனையாளரே பொறுப்பாவார் என்று கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேலும் மருந்தாளுநர் மற்றும் விற்பனையாளர் விற்பனை செய்துள்ள விவரத்தை கணினியில் பதிவு செய்து, கணினி பிரிவிற்கு விவரம் சமர்ப்பிக்கவேண்டும் என்று என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரி மகாலெட்சுமி தான் மருந்து விற்பனை மற்றும் தவறான மருந்துகளை விற்பனை செய்வது ஆகியவற்றை பராமரிப்பதற்கு மட்டும் தான் அவர் பணியமர்த்தப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவருடைய பொறுப்பு மற்றும் பணி குறித்த உயர்அதிகாரிகள் போட்ட செயல் ஆணை ஏதாவது நான் பார்வையிட்டேனா என்றால் நான் பார்வையிடவில்லை. நான் மயிலாடுதுறை விற்பனை பண்டக சாலையில் 2011 முதல் 2015 வரை Audit செய்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அது குறித்த எந்த

CJM, MAYILADUTHURAI.

16/4/26

ஆவணங்களையும் நான் பார்வையிடவில்லை. மதிவாணன் என்னுடைய விசாரணையில் பத்தி 4-ல் மகாலெட்சுமியின் பொறுப்புகள் குறித்த விவரத்தை கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். சண்முகசுந்தரம் என்பவர் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலைய கண்காணிப்பாளரை நான் தான் விசாரித்தேன். அதில் சி.சி. எண்.230/2025-ல் இரசீது எண்.2947 19.10.2012 ரூ.1,98,000/- பொருட்கள் வாங்குவதற்கு credit bill போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவெண்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள எந்தவொரு பதிவேடுகளையும் நான் பார்வையிடவில்லை என்று சொன்னால் சண்முகசுந்தரம் வாக்குமூலத்தின் படி அவர் பதிவேடுகளை பார்வையிட்டு தான் கூறினார். அவர் கொடுத்த வாக்குமூலத்தின் படி எந்தவொரு பதிவேடுகளையும் நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விசாரணையின் போது காலவதியான பொருட்களை திரும்ப கொடுத்தது குறித்தோ அல்லது பொருட்கள் வாங்கியது குறித்தோ அந்தந்த சாட்சியத்தின் அலுவலகத்திலோ அல்லது கடைகளிலோ உள்ள பதிவேடுகளை அல்லது இரசீதுகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். துறை ரீதியான விசாரணை அலுவலரும் அந்த அலுவலகத்திலோ அல்லது கடைகளிலோ உள்ள பதிவேடுகளை அல்லது இரசீதுகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால், அவர்கள் பதிவேடுகளை பார்த்துதான் வாய்மொழி வாக்குமூலம் என்னிடம் கொடுத்தார்கள் மற்றும் 81 துறை ரீதியான விசாரணை அதிகாரியிடம் அந்த வேறுபாடுகள் குறித்து எழுதி கையொப்பம் போட்டு கொடுத்தார்கள். நான் சரிவர விசாரணை செய்யாமல் பிரிவு 81 விசாரணை அதிகாரியின் அறிக்கையை வைத்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்ச ரியல்ல. 81 விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையும் என்னுடைய குற்ற அறிக்கையும் சட்டத்திற்கு உட்பட்டு போடப்பட்டவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே எதிரிகள் குற்றம் புரிந்திருந்தால் வருட வருடம் நடக்கும் தணிக்கை அறிக்கையிலேயே இருப்பு குறைவு குறித்து குறிப்பிட்டிருப்பார்கள் என்றும், எதிரிகள் மீது காழ்புணர்ச்சி கொண்டு துறை

CJM, MAYILADUTHURAI.

P. Jeevanaty
16/4/26

நடடிவக்கை எடுத்து இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(1வது எதிரி வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை மற்ற வழக்கறிஞர்களால் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது)

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

P. Kalavathi 16/4/26

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

16/4/26

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

P. Kalavathi
16/4/26

CJM, MAYILADUTHURAI.